கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**O.S.No.334/2002** தேதி: **28.10.2025**

பிரதிவாதி தரப்பு சாட்சி 3- (ஆதிசக்திசிவபன்னீர்செல்வம், த/பெ.ஆதிசக்திசிவசண்முக ராஜா) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. அசல் வழக்கு எண் 42/1987, 334/2002 மற்றும் 191/2003 ஆன வழக்கு சங்கதிகள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அசல் வழக்கு 42/1987 யார் தாக்கல் செய்த வழக்கு என்றால் எனது சித்தப்பா மற்றும் எனது பாட்டி தனலட்சுமி மீது வாதி கோயில் தாக்கல் செய்த வழக்கு ஆகும். நான் கூறுமாறு வாதி கோயிலால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு அது அல்ல என்றாலும் அந்த வழக்கானது எனது சித்தப்பா மற்றும் பாட்டி தான் வாதி கோயில் மீது தாக்கல் செய்தார் என்றாலும் எனக்கு தெரியாது.
2. அசல் வழக்கு எண் 42/1987 ல் போடப்பட்ட நிறைவேற்ற மனு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 42/1987 ல் முதலில் முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு பிற்பாடு இந்நீதிமன்றத்திற்கு மாறுதல் மனு (Trop)அளிக்கப்பட்டு மாற்றப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.
3. நான் எனது பிரமான வாக்குமூலத்தில் இவ்வாறு மாறுதல் செய்யப்பட்ட விவரத்தை கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த மாறுதல் மனு யாரால் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் நான் தான் தாக்கல் செய்தேன். அசல் வழக்கு எண் 42/1987 ஆனது எனது பாட்டியும்

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2025.10.28 17:25:30 +0530

சித்தப்பாவும் 40 வருடங்களுக்கு மேலாக வழக்கு சொத்தில் இருப்பதால் அதன் அனுபவத்தை தொந்தரவு செய்யக்கூடாது என்றும் விளம்புகை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்தனர் என்றால் எனக்கு தெரியாது.

4. அந்த வழக்கில் வாதி கோயில் எதிர் கோருரிமை தாக்கல் செய்தார்கள் என்றாலும் நஷ்ட ஈடு கோரி இருந்தார்கள் என்றாலும் சரிதான். உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 42/1987 மற்றும் அதில் உள்ள கோருரிமை இரண்டுமே தள்ளுபடி செய்யப்படி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

ஆவணங்கள் ஏதும் தாக்கல் இல்லை.

குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது .

மறுவிசாரணை இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be correct.*

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2025.10.28 17:25:36 +0530

***Additional District Munsif , Cuddalore.***